



# ஞானச்சுடர்

## மலர்

மார்கழி 1998




வெளியீடு

**சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறள் வழி

"பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்."

பொருள் :

பெருமை உடையவர் வறுமையிலும் நற்செயலை முறைப்படி செய்து முடிப்பர்.

ஸ்ரீ

அருணாசலசிவ அக்ஷர மணமாலை

நூல்

அருணாசலசிவ அருணாசலசிவ
அருணாசலசிவ அருணாசலசிவ!

46) துப்பறி வில்லா விப்பிறப் பென்பய
னொப்பிட வாயே னருணாசலா (அ)

47) தூய்மன மொழியர் தோயுமுன் மெய்யகந்
தோயவே யருளென் னருணாசலா (அ)

48) தெய்வமென் றுன்னைச் சாரவே யென்னைச்
சேர வொழித்தா யருணாசலா (அ)

49) தேடா துற்றநற் றிருவரு ணிதியகத்
தியக்கந் தீர்த்தரு ளருணாசலா (அ)

50) தைரிய மோடுமுன் மெய்யக நாடயான்
றட்டழிந் தேனரு ளருணாசலா (அ)

[தொடரும்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 12

1998 மார்கழி

## பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| 1) | திருமந்திரம் காட்டும் வாழ்வியற் கருத்துக்கள் | 1 - 3 |
| 2) | மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாஸ்லோவின் கோட்பாடுகள் | 4 - 6 |
| 3) | கைதையூர் தவத்திரு ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் | 7 - 10 |
| 4) | பார்த்தனின் தப்புக் கணக்கு | 11 - 12 |
| 5) | பிரதோஷ மகிமை | 13 - 16 |
| 6) | நாலு யுகங்களிலும் வாழ்ந்த மனிதர்கள் பற்றிய வரலாறு | 17 - 18 |
| 7) | நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே... | 19 - 20 |
| 8) | யாத்திரை | 21 - 22 |
| 9) | முருகன் கீர்த்தனை | - 23 |
| 10) | கலியுகக் கந்தன் சந்நிதி முருகன் | 24 - 27 |
| | மாணவர் பக்கம் | |
| 11) | தமிழில் சிறுகதை வளர்ச்சி | - 28 |
| 12) | Easy Way to Learn English (Part–12) | 29 - 30 |

அன்பளிப்பு : மலர் ஒன்று 25/- ரூபா

வருட சந்தா தபால் செலவுடன் 325/- ரூபா.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர்.

அச்சுப் பதிப்பு : அச்சகம் - சந்நிதியான் ஆச்சிரமம்

தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழி மாத சிறப்புப் பிரதி பெறுவோர் விபரம்

திரு. இ. உருத்திரா
( சட்டத்தரணி, பருத்தித்துறை )

திரு. எஸ் ஏ. அருணாசலம்
( அருள்ரேடர்ஸ், 83, கண்டி றோட், சுண்டிக்குழி - யாழ் )

திரு. வி. சிவபாலன்
( தலைவர், இடைக்காடு மாவலிந்த இடைக்காடர் சனசமூக நிலையம், )

திருமதி. கனகலிங்கம்
( பொருளாளர், வழிபடுவோர் சபை,
உச்சில் புவனேஸ்வரி அம்மன் தேவஸ்தானம், கரணவாய் )

திரு. சி. சிவபாலசிங்கம்
( கிராமசேவையாளர், பொலிகண்டி )

திரு. S. கணேஸ்
( கிராமசேவையாளர், கரணவாய் தெற்கு )

திரு. வ. இ. நடராசிகாமணி
( முன்னாள் நகரசபைத் தலைவர்,
வல்வை முத்துமாரி அம்மன் தேவஸ்தானம் )

திரு. கு. மனோகரன்
( ஆசிரியர், நாவலடி, உடுப்பிட்டி )

கௌரவ செயலாளர்
( நகரசபை, வல்வெட்டித்துறை )

திரு. க. ஸ்ரீஸ்கந்தராசா
( ஆசிரியர், வல்வெட்டித்துறை )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஞானச்சுடர்"
# கார்த்திகை மாத வெளியீடு

## வெளியீட்டுரை :

கார்த்திகை மாதத்திற்கான வெளியீட்டுரையை யா/சிதம்பராக் கல்லூரி அதிபர் திரு. செ. யோகச்சந்திரன் அவர்கள் மேற்கொண்டார்கள். அவர் எமது சமயத்தில் இதுபோன்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை நாங்கள் பாராட்டாமல் இருக்கமுடியாது எனவும் தொடர்ச்சியாக மாதவெளியீட்டை மேற்கொள்வது சாதனையாகவே கருதப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார். இந்தமலர் க. பொ. த. (உ. த.) வகுப்பு மாணவர்களது இந்துசமயம், இந்துநாகரிகம் போன்ற பாடக் கருத்துக்களைத் தாங்கிவருவது விரும்பத்தக்கதாக இருக்கும் எனவும் தனது ஆலோசனையையும் தெரிவித்தார்

## ஆய்வுரை :

மலருக்கான ஆய்வுரையை சிவஸ்ரீ பண்டிதர் கை. நமசிவாயக் குருக்கள் அவர்கள் மேற்கொண்டார்கள். இவர் தமது உரையில் இந்தச் சுடரை இளைஞரும் வாசிக்கக்கூடியதாக மிகத்தெளிவாக அச்சிடப்பட்டிருப்பது பற்றி எடுத்துக்கூறினார். இந்தப்பேரவையின் போஷகர்களில் ஒருவராகத்தானும் இருப்பதால் இந்தமலர் தொடர்பான சிறப்பான அம்சங்களைக் குறிப்பிடுவதைத் தவிர்த்து மேலும் இந்தமலர் சிறப்படையக்கூடிய ஆலோசனை அதிகம் வழங்குவதாகக்கூறி பின்வரும் ஆலோசனைகளையும் தெரிவித்தார். இந்தமலர் யாழ் மாவட்டத்தின் எல்லாப் பகுதி மக்களையும் பிரதிபலிக்கக்கூடியதாக தென்மராட்சிப்பகுதி அறிஞர்களின் ஆக்கங்களை மேலும் அதிகரிப்பது பொருத்தமானது எனக்குறிப்பிட்டார். மேலும் போலி வேடக்காரர்களின் ஆக்கங்களுக்கு இடம் கொடாமலும் வித்துவச்செருக்கை காட்டுவோரை தவிர்த்தும் பாமரமக்களுக்கு பயன்படக்கூடிய ஆக்கங்களுக்கே இடம் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். இறுதியாகக் கட்டுரைகள் ஒவ்வொன்றையும் அடியார்களுக்கு மதிப்பீட்டுக்கூறி தன்னுடைய ஆய்வுரையை நிறைவு செய்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வானச் சுடரென மதிக்க உதித்திடும்

# — ஞானச்சுடர்! —

ஞானச் சுடரே! ஞானச் சுடரே!
வானந் தொடும்புகழ் வண்ணச் சுடரே!
தேனின் இன்சுவைச் செந்தமிழ் வல்ல
ஞான அன்பர் நடாத்தும் சுடரே!
சங்கரன் மகனாம் ஐங்கரன் போற்றியே
திங்களோர் மலராய்த் திகழும் சுடரே!
அயில்வேல் முருகன் ஒருபால் விளங்க
மயில்வா கனனார் மறுபால் துலங்க
வேலொடு நீபம் யாழ்முறத் திறையா
தாரொடு தாமரை பிரணவந் தாங்கி
உலகம் புகழ அனைவின் பொருளதாய்
உயர் தெய்வ உத்தமச் சுடரே!
கலைபல ஞானமெய்க் கனிந்த பலவகை
நிலைதரு சந்நிதி நிறைந்தவர் பதங்களும்
தொண்டர் புராணத் தொடர்கட் டுரைகளும்
மன்னிய திருமுறை வரலா றுகளும்
பாரதக் கதைகளும் மேற்றிசை யுரைகளும்
செல்வச் சிறார்கள் தேடிக் கற்றிட
வல்ல ஆங்கில வகைபல தொகுப்பும்
மனிதப் பிறவியின் மாண்புறு பயனும்
தருமச் செய்கையும் பயனுந் தாங்கி
சைவ பண்பாட்டுச் சபைக்கணி கலமாய்
அன்னதா னக்கொடை அன்று நடாத்திய
கடவுட் சுவாமிகள், மயில்வா கனத்தொடு
முருகேசு அடிகள் முன்னிய பெயரொடு
செய்த பணிகளும் சிறப்புறப் பொறிவை
பின்னுஞ் சிறிதாய்ச் செழித்தே யுயர்ந்து
பென்னம் பெரிதா யின்று தொடரும்
அன்னக் கொடையை அன்றுபோ லின்று
மன்னிட வளர்க்கும் சபைநிர் வாகி
கண்ணிய ராஜ மோகன தாசரின்
எண்ணிலாச் சேவையோ டிணைந்து வெளிவரும்
ஞானச் சுடரே! வருக! வருக!
ஆல சந்நிதி ஐயன் அருளாலே.

புலவர் வை. க. சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமந்திரம் காட்டும் வாழ்வியற் கருத்துக்கள்

தொடர்ச்சி ...

படைத்தற் கடவுளாகிய பார்ப்பானாகிய பிரமன் கட்டிய வீடே இந்தச் சரீரம் ஆகும். இந்தச் சரீரத்தில் உள்ள மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து பசுக்கள் காணப்படுகின்றன. இந்த ஐம்புலன்களை சரியாக நெறிப்படுத்தாது போனால் இவை ஐந்தும் மேய்ப்பான் இல்லாத பசுக்களைப்போல வெறிகொண்டு திரியும். ஐம்புலப் பசுக்களை மேய்ப்பதற்குரிய ஞானம் கிடைத்து வெறியும் அடங்கினால் இந்த ஐந்து பசுக்களும் பேரின்பமாகிய ஞானப் பாலைப் பொழியும். கள்ளப் புலன்களாகவும், வஞ்சப் புலன்களாகவும் இருந்த ஐம்புலன்களும் ஞான விளக்குகளாக மாறிவிடும்.

பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாயின் வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசு ஐந்தும் பாலாச் சொரியுமே.

என்று திருமந்திரப் பாடல் மெய்கூறிய உண்மைகளை விளக்கி நிற்கிறது.

பேதைகள் உலகியல் இன்பங்களில் ஆசையை வைப்பார்கள். ஆனால் ஞானிகள் நிலையில்லாத பொருட்களில் பற்று வைப்பதைத் தவிர்த்து நிலையான பரம்பொருளிடத்தில் பற்றை வைத்தார்கள். நிலையான இன்பத்தைத் தரக்கூடியது இறைவன் மேல் வைக்கும் பற்றே என்பதை அவர்கள் உணர்ந்திருப்பார்கள். உலகப் பற்றுக்களை விடுவதற்கு இறைவனைப் பற்றிப் பிடிப்பது ஒன்றே வழி என்பதை "பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு" என்றே தமிழ் மறையாகிய திருக்குறளும் கூறியது. செல்வம், உடல், இளமை ஆகியவற்றில் நாம் நிறையப் பற்றுவைத்து வாழ்கிறோம். வயதிலே முதியவர்களைப் பார்த்து வயதிலே இளையவர்கள் கிழடு, பழசு என நையாண்டி செய்வதும் உண்டு. "பழுத்தோலையை விழக் குருத்தோலை சிரிக்கிறது" என நம்மவர்களிடம் ஒரு முதுமொழியும் உண்டு. இளமையிலே கரும்பு பிழிந்த சாறாக விரும்பிய பெண்ணுருக்கு முதுமையிலே காஞ்சிரங் கொட்டையாக பயனற்ற பொருளாக மாறிவிடும் பரிதாபகரமான நிலை ஏற்படும் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் தெளிவாக விளக்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்புமை முன்னொன்னை மெல்லியன் மாதர்
கரும்பு நுகர்ந்தன் கடைக்கொண்ட நீர்போல்
அரும்பொருந்து மென்முலை ஆயிழை யார்க்கும்
கரும்பொத்துக் காஞ்சிரங் காயும் ஒத்தேனே.

அருள் இல்லாதவர்களுக்கு தெய்வ உலகத்தில் இடமில்லாதது போல பொருள் இல்லாதவர்களுக்கு இந்தப் பூவுலகத்தில் இடமில்லை என்பதை வள்ளுவரின் திருக்குறள் பல இடங்களில் விளக்குகிறது. பொருள் இல்லாதவரை எல்லோரும் எள்ளி நகையாடுவார்கள். பொருள் உள்ளவர்களை அனைவரும் போற்றித் துதிப்பார்கள் இல்லாரை எல்லாரும் எள்ளுவர். செல்வரை எல்லாரும் செய்வர் சிறப்பு.

திருக்குறள் இதனை விளக்குகிறது. புடவை மானத்தைக் காக்க வல்லது போல பொருளும் ஒருவருடைய மானத்தைக் காக்க வல்லதாகும். பொருள் இல்லாதவர்களை விட்டு உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் விலகி விடுவார்கள். பொருளாதார வசதி இல்லாதவர்களால் தானதருமங்கள் எதுவும் செய்ய முடியாது. உலகியலில் அவர்கள் வெறும் நடைப்பிணங்களாகவே காணப்படுவார்கள். ''பணமில்லாதவர்கள் பிணம்'' என்பதே முதுமொழி ஆகும்.

புடவை கிழிந்தது போயிற்று வாழ்க்கை
அடையப் பட்டார்களும் அன்பிலர் ஆனார்
கொடையில்லை கோளில்லை கொண்டாட்டம் இல்லை
நடையில்லை நாட்டில் இயங்குகின்றார்கட்கே

எனத் திருமந்திரம் பொருளில்லாதவனின் பரிதாபகரமான நிலையைத் தெளிவாக விளக்குகிறது.

இறைவன் வெளிப்படும் இடங்களில் ஒன்றாக சிவனடியார் வழிபாட்டை பெரியபுராணம் குறிக்கிறது. தொண்டர்களின் உள்ளத்தில் இறைவன் வீற்றிருப்பதால் அவர்களுடைய பெருமை பேசுவதற்கு பெரியது என்பதை ''தொண்டர் தம்பெருமை பேசவும் பெரிதே'' என ஔவையார் குறிப்பிடுகிறார். நடமாடும் கோயிலாகத் திகழ்கின்ற சிவனடியார்களுக்குச் செய்யும் பணி படமாடும் கோயிலாகிய இறைவனுக்குச் செய்கின்ற பணிக்குச் சமனாகும் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

படமாடக் கோயில் பகவற்கு ஒன்றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்கது ஆமே.

★ தேவையற்ற விவாதங்கள் செய்தல் தீமை தரும். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருவருடைய நாளாந்தச் செய்கையும் தெய்வீகத் துலாக் கோலில் நிறுக்கப்படுகிறது என்றே இந்து தர்மசாஸ்திர நூல்கள் கூறு கின்றன. உலகியல் சட்டங்களில் உள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தி பிரபஞ்ச வாழ்வில் நாம் செய்கின்ற தவறுகளில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம். ஆனால் தெய்வ நீதிக்கு யாரும் தப்பமுடியாது. பெரிய கங்காணியாக இருக்கின்ற இறைவன் உலகில் நடைபெறும் சகல செயற் பாடுகளையும் நாளாந்தம் அவதானித்துக் கொண்டே இருக்கிறான். இறைவனின் சர்வவியாபகத்தை உணராதவர்கள் களவுகள் பல செய் வார்கள். எல்லாப் பொருட்களிலும் இறையருள் கலந்திருப்பதை உணர்ந் தவர்கள் களவைத் தவிர்த்து நடப்பார்கள்.

கங்காணியில்லென்று கள்ளம் பல செய்வார்
கங்காணியில்லா இடமில்லைக் காணுங்கால்
கங்காணியாகக் கலந்தெங்கு நின்றானைக்
கங்காணி கண்டார் களவொழிந்தாரே

என்ற திருமந்திரப் பாடல் இறைவனின் பெருமையையும் வியாப கத்தையும் சிறப்பாக எடுத்து விளக்குகிறது.

திருமந்திரத்தில் அரசியல் கருத்துக்கள் பல கூறப்பட்டுள்ளன. நாட்டை ஆளும் அரசனுக்கு கல்வி அறிவு மிகவும் அவசியம் என்பது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. கல்வி அறிவில்லாத அரசனை திருமூலர் யமனுக்கு ஒப்பிட்டுக் கூறியுள்ளார். கல்வி அறிவில்லாதவனை யமனுடன் ஒப்பிட்ட திருமூலர் அந்த வழியில் யமனிலும் மோசமானவனாக அவனைக் குறிப்பிடுகிறார் அரசன், அறத்துக்கு மாறாகவும் செயற்படுவான் ஆனால் யமன் தர்மம் தவறி என்றுமே செயற்படமாட்டான்.

கல்லா அரசனும் காலனும் நேரொப்பர்
கல்லா அரசனிற் காலன் மிகநல்லன்
கல்லா அரசன் அறம் ஓரான் கொல் என்பான்
நல்லாரைக் காலன் நணுக நில்லானே.

எனத் திருமந்திரம் இதனைச் செப்புகிறது. தமிழ் மறையாகிய திருக்குறள் போல தமிழ் மந்திரமாகிய திருமந்திரத்திலும் வாழ்வியற் கருத்துக்கள் பல காணப்படுகின்றன. வையத்துள் வாழ்வாங்கு வாழ்வ தற்கு வழிகாட்டும் ஞானத் திருநூலாக திருமந்திரம் காணப்படுகிறது.

சிவத்தமிழ்வித்தகர்
சிவ. மகாலிங்கம்
(விரிவுரையாளர் - பலாலி ஆசிரியர் கலாசாலை)

★ அன்பைவிட வலியசக்தி உலகில் எங்கும் இல்லை. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானுடத்தை மேன்மைப்படுத்தும்

## மாண்புமிகு கோட்பாடுகள்

### ( மகாபாரதத்திலிருந்து )

# விதி விளைந்த வழி

தொடர்ச்சி ....

மனைவியர் உரைதனைச் செவிமடுத்த மன்னன் அவர்களையும் உடன் அழைத்தவண்ணம் வடதிசை நோக்கிப் புறப்பட்டான். இவ்வாறு சென்று சமயம் நாகசதம் என்னும் மலையை அடைந்தான். அங்கே சில நாட்கள் கழித்தான். தொடர்ந்து செல்ல விரும்பிக் குபேரன் உறையும் உத்தியான வனத்தையடைந்தான். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு சதசிருங்கம் என்னும் மலையை அடைந்தான். அம் மலையின்கண் அநேக ரிஷிகள் தவம்புரிந்திருந்தனர். அவர்களிடையே தங்கியிருந்து தவம் புரிவது சுலபமாய் இருக்கும் என்றெண்ணியவனாய்ப் பாண்டு மன்னன் அங்கேயே தங்கிவிட்டான். பொறிபுலன்களையடக்கி நல்வாழ்வில் ஈடுபட்டான்.

அம்மலையில் வாழ்ந்துவந்த ரிஷிகள் பாண்டுமன்னனை மிக அன்புடனும் ஆதரவுடனும் காப்பாற்றி வந்தனர். சில காலம் கழிந்தது. தவ வலிமையடைந்தவனாய்ப் பாண்டு மன்னன் விளங்கினான். இவ்வாறான காலத்தில் ஓர் அமாவாசை தினத்தில் சதசிருங்க மலையில் வசித்த ரிஷிகள் அனைவரும் பிரம்மலோகம் செல்லத் தலைப்பட்டனர். இதனைக் கண்ணுற்ற பாண்டுமன்னனும் அவர்களுடன் பிரம்மலோகம் செல்லப் பெருவிருப்புக்கொண்டான். இதனை அவதானித்த ரிஷிகள் "சொர்க்க லோகம் போவது கடினமானது எனவே அந்த முயற்சியில் நீ ஈடுபடாதே" என்று அவனைத் தடுத்துவிட்டனர். குழந்தைகள் இல்லாத யான் எப்படிச் சொர்க்கலோகம் செல்ல முடியும் என்று கவலைப்பட்ட மன்னனை ரிஷிகள் அமைதிப்படுத்தி "மல்லரை உனக்கு நிகரற்ற தேவ அம்சமுள்ள புதல்வர்கள் அவதரிப்பார்கள். நீ கவலையடைந்து கலங்காதே" என்று கூறி ரிஷிகள் புறப்பட்டுச் சென்றனர்.

ரிஷிகளின் உரைகளைச் செவிமடுத்த பாண்டுமன்னன் கலங்கக் கிந்தம முனிவரால் கிடைத்த சாபத்தை நினைந்தவனாய்க் கவலையுற்றான். பின்னர் குந்திதேவியை அழைத்து ரிஷிகள் உரைத்தவற்றை எடுத்துரைத்தான். குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்கள் சொர்க்கத்திற்குச் செல்ல முடியாதிருப்பதையும் எடுத்துக்கூறி மிகக் கவலைப்பட்டான். மன்னனின்

★ அநீதியான பொருள்கள் துக்கத்தையே தரும். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரைகளைச் செவிமடுத்த குந்திதேவி, துர்வாச முனிவர் தனக்குபதேசித்த மந்திரங்களின் மகத்துவத்தைத் தன் கணவன் பால் எடுத்துரைத்தாள். இதனால் மன்னன் பெருமகிழ்வு கொண்டு தேவர்களை ஆராதனை செய்யுமாறு குந்திதேவியைப் பணித்தான்.

## பாண்டவர்கள் பிறப்பு

### தருமர் ( யுதிஷ்டிரன் )

பாண்டு மன்னன் குந்திதேவியை நோக்கி "அறம் தான் உலகில் தலையாயது. அறத்தின் வழி நடப்பவனே வெற்றி அடைவான். தருமம் தான் உலகில் நிலைபெற்று இருப்பது. மன்னன் ஒருவன் அறவழி நடப்பானாயின் அவனே மேன்மையடைவான். எனவே நீ அறத்தின் மேன்மை பொருந்திய ஒரு புதல்வனைத் தருமதேவதையிடம் வேண்டிப் பெற்றுக் கொள்வாயாக" என்றுரைத்தான். இவற்றைச் செவியுற்ற குந்திதேவி முறைப்படி பூசைகள் புரிந்து அறக்கடவுளை வேண்டுதல் செய்து முனிவர் உபதேசித்த மந்திரத்தைச் செபித்தாள். இவளின் பூசனையால் மகிழ்ந்த தருமதேவதை அவள்முன் தோன்றி அருள் புரிந்தான். இதன் பயனாக குந்திதேவி அறத்தின் மேன்மைகள் பொருந்திய யுதிஷ்டிரனென்னும் ஆண்மகவைப் பெற்றெடுத்தாள்.

### பீமன்

தருமர் பிறந்தமையால் மனமகிழ்வுற்ற பாண்டுமன்னன் இன்னுமோர் புத்திரனைப் பெற விழைந்தான். இதனால் குந்திதேவியை நோக்கி "பெண்ணே ஒரு மன்னன் பெருமை பெறுவது அவன் புத்தி சாதுரியத்தினாலும் மனோபலத்தினாலும் ஆகும். எனவே பலசாலியான ஒரு புதல்வன் இருப்பதை யான் விரும்புகிறேன். அதற்கு முயற்சி செய்" என்று கூறினான். இவற்றைச் செவியுற்ற குந்திதேவி தனது நாயகனின் உள்ளக்கருத்தை நிறைவேற்றும் பொருட்டு வாயுபகவானை ஆராதனை செய்து துர்வாச முனிவர் உபதேசித்த மந்திரங்களை உச்சரித்து தியானத்தில் ஆழ்ந்தனள். அப்போது வாயுபகவான் அவள் முன்தோன்றிப் "பெண்ணே உனது ஆராதனையால் மகிழ்ந்து உனக்கு வரம் தருகின்றேன். எனது அம்சமாக மிகவும் பலசாலியான ஒரு புதல்வன் உனக்குக் கிடைப்பான்" என்று கூறி மறைந்தருளினார். இதனால் மிகவும் பலம் வாய்ந்தவனாகிய பீமனைப்பெறும் பாக்கியம் பெற்றாள் குந்திதேவி.

### அர்ச்சுனன்

பீமன் பிறந்தபின்பு பாண்டுமன்னன் மகிழ்வுற்றிருந்தான். ஆனாலும் அவன் மனதில் ஓர் எண்ணம் உதயமாயிற்று. இந்திரன் தானே தேவர்களின் மன்னன். எனவே அவனை நினைந்து வரம் பெற்று வில்வித்தையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பற்ற ஒரு புதல்வனைப்பெற விழைந்தான் பாண்டுமன்னன். இவ் விருப்பைக் குந்திதேவிக்குத் தெரிவித்துத் தானும் ஓராண்டு காலம் இந்திரனை நோக்கித் தவம் செய்தான். தவத்திற்கிரங்கிய இந்திரன் பாண்டு மன்னனின் முன்தோன்றி "மன்னா உனக்குச் சிறந்த புதல்வன் ஒருவன் பிறக்கும் வல்லமை அருள் புரிகின்றேன். அவன் பலமும் திறமையும் வீரமும் ஆற்றலும் மிக்கவனாய்த் திகழ்வான். பெருங்கீர்த்தியுடையவனாய் விளங்குவான்" என வரமருளினான். இதனால் மகிழ்வுற்ற பாண்டு மன்னன் குந்திதேவியை அழைத்து இந்திரனின் வரத்தின் மேன்மையைத் தெரிய வைத்தான். குந்திதேவியை இந்திரனைப் பூசித்து அருள் பெற வேண்டினான். இதற்கமையக் குந்திதேவி இந்திரனைப் பூசித்துத் துர்வாச மகரிஷி உபதேசித்த மந்திரங்களை ஜெபம் செய்தாள். இதன் பயனாய் இந்திரன் அவள் முன்தோன்றி "குந்தி உனக்கு கார்த்தவீரியனுக்கு நிகரானவனும், சிவனின் பராக்கிரமம் உடையவனும் சிறந்த ஒப்பற்ற மேன்மையுடையவனுமாய் ஒரு புதல்வன் அவதரிப்பான்" என்று கூறியருளினான். இதன் பயனாய் ஒப்பற்ற புதல்வனாகிய அர்ச்சுனனைப் பெற்று மகிழ்ந்தாள் குந்திதேவி.

## நகுலன் – சகாதேவன்

இப்படியாக அறக்கடவுள் மூலம் யுதிஷ்டிரனையும், வாயுதேவன் மூலம் பீமசேனனையும், இந்திரன் மூலம் அர்ச்சுனனையும் ஈன்றெடுத்த குந்திதேவியை நோக்கி மீண்டும் ஒரு அழகிய புத்திரனைப் பெற்றுத்தரும்படி பாண்டு மன்னன் கேட்டுக்கொண்டான். ஒரு பெண் மூன்று குழந்தைகளுக்கு மேல் பெறவிரும்புதல் தவறெனக் குந்திதேவி மறுத்து விட்டாள்.

பாண்டு மன்னனின் இளைய மனைவியாகிய மாத்ரிதேவி தனக்குக் குழந்தைச் செல்வம் வேண்டுமென்ற ஆவலைப் பாண்டு மன்னனுக்குத் தெரிவித்தாள். பாண்டு மன்னனின் கட்டளைப்படி குந்திதேவி தனக்குத் துர்வாச மகரிஷி உபதேசித்த மந்திரத்தை மாத்ரிதேவிக்கு உபதேசித்தாள். மாத்ரிதேவி அஸ்வினிதேவர்களுக்குரிய மந்திரங்களை ஓதி அவர்களைத் தியானம் செய்தாள். அஸ்வினிதேவர்கள் இருவரும் பூமிக்கு வந்து, தருமம், பக்தி, கல்வி, ஒழுக்கம், அழகு ஆகியவற்றில் சிறந்த நகுலன், சகாதேவன் என்ற இரு புத்திரர்களை அருளிச் சென்றனர்.

இவ்வண்ணம் சிறந்த தெய்வீகமான ஐந்து குழந்தைகளைப் பெற்ற பாண்டு மன்னனும் குந்திதேவி, மாத்ரிதேவி ஆகியோரும் பெருமகிழ்வு கொண்டனர். இவ்வைந்து புதல்வர்களும் பஞ்சபாண்டவர்களென அழைக்கப்பட்டனர்

(தொடரும்........

சிவானந்தவாரிதி
சிவத்திரு வ. குமாரசாமிஐயர்

தலைவர்,
வலிவடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.
(மல்லாகம்)

★ பெருநாளாம் உள்ளத்துக்கு உவகையே குறிப்பும். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதையூர்

# தவத்திரு ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள்

(தொடர்ச்சி......

இத் தவசிரேட்டர் ஒருநாள் யாழ்க்கச்சேரி வீதிவழியே சென்று கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு அன்பர் அவரை வணங்கி "சுவாமி நீங்கள் இப்படி வெளிக்கிட்டு எவ்வளவு காலம்?" எனக்கேட்க ஆறு வருடங்கள் எனக் கூறினார். அவர் அவ்வாறு கூறியதும் தாமதம் அவ் அன்பரின் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுத்தது. கைப்பற்றி அவர் சுவாமிகளை வணங்கி அவரைத் தமது வீட்டிற்கு எழுந்தருளும்படி பணிவுடன் கேட்டுக்கொண்டார்.

சுவாமிகளும் அவரின் வேண்டுகோளை ஏற்று இல்லத்திற்குச் சென்றார். அன்பர் இவரது தலைக்கு எண்ணெய் வைத்து ஸ்நானம் செய்வித்தும் பின்னர் புதுவேட்டியும் அணிவித்து அமுதூட்டி பசி மாற்றி இன்புற்றார். இது எது பற்றியது? ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? எனச் சுவாமி வினவவும் அதற்கு அவ்வன்பர் தான் ஒரு கனவு கண்டதாகவும் அக்கனவில் ஒரு பெரியார் தோன்றி தமது தவப்பிள்ளை ஆறு வருடங்களாக எண்ணெய் தண்ணீரின்றி பிச்சை ஏற்றுத் தவம் முடித்து வருகிறார் என்றும் அவருக்கு வேண்டியதைச் செய்தனுப்பு என்றும் கூறிச் சுவாமிகள் திருவுருவைக் காண்பித்ததாகவும் கூறினார். அக்கனவின் பிரகாரமே நான் அவரை இவ்வாறு உபசரிக்க நேர்ந்ததென்றும் அன்பர் கூறினார். இருவரும் ஆரத்தழுவினர். இருவர் கண்களிலும் நீர்கள் சொரிந்தன.

தாயைத்தேடி ஓடும் பசுக்கன்றுபோல் தன்குருநாதரை நோக்கி ஓடி சச்சிதானந்தர் எனவும் தீட்சா நாமத்தைப் பெற்றார். அப்போ குருவுபதேசமாக "கோடியாண்மார்களுக்கும் குருவாகவும், மகானாகவும் திகழ்வாயாக" குருவானவர் திருவாய் மலர்ந்தருளினார்.

இறுதியில் சச்சிதானந்தருக்கும் கைதடிக்கும் என்ன தொடர்பு?

1953 ஆம் ஆண்டு பன்றித்தலைச்சி அம்மன் கோவில் முதலாளி வீட்டு முற்றத்தில் "அம்மா பிச்சை" என்று ஒரு மெல்லிய குரல் கேட்டது. முதலாளியின் துணைவியார் கைதடியைச் சேர்ந்த செல்லம்மா அம்மையார். இவர் பிச்சை கேட்டவர்க்கு அன்று ஒரு சிரட்டை கஞ்சிவார்த்துக் குடிக்கக்கொடுத்தார். அதைக் குடித்துவிட்டு ஒன்றும் பேசாது செல்லவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதென்ன! பசிக்குக் கஞ்சி கொடுத்தால் ஒரு வார்த்தை நன்றிகூடச் சொல்லாமல் செல்கிறாரே" என்று அம்மையாரை நினைக்க வைத்த செய்கை. சொல்லின்மையைக் கடந்து நின்ற சொரூப நிலைப்பாட்டினை அம்மையார் உணரத் தொடங்கினார்.

ஒரு நாள் கடுமையான மழைபொழிந்து கொண்டிருந்தது. மாலை சாயும் நேரம் நடசுவாமியவர்கள் மழையில் நனைந்தபடி முதலாளி செல்லத்துரை வீட்டுப் படலையருகில் வந்து நின்று கொண்டு தண்ணீர் கேட்டார். அம்மையார் தண்ணீர் கொடுத்து விட்டு அவரை நோக்கி சுவாமி! இந்த மழைக்குள் எங்கே போகிறீர்கள் எனக் கேட்க அவரும் கோவில் வழியில் போய்க் குளிக்கப்போகிறேன் எனச் சொன்னார். அம்மையார் உடுப்புக்கு என்னசெய்யப் போகிறீர்கள் என வினவவும், இதைப் பிழிந்து உடுக்கலாமெனத்தான் உடுத்திருக்கும் நாலு முழத்துண்டைக் காட்டிக் கூறினார். அம்மையார் மிகவும் மனம் வருந்தியவராய் "கடும் மழையாக இருப்பதனால் நீங்கள் இங்கேயே தங்குங்கள் சுவாமி" என வேண்டினார். சுவாமியும் இசைந்தார. இதன் பின் செல்லத்துரையும் அம்மையாரும் சேர்ந்து குளிக்க ஏற்பாடு செய்து மாற்று வேட்டி கொடுத்து அமுது செய்வித்தனர். இரவாகி விட்டதால் சுவாமிகள் வெளித்திண்ணையில் படுத்திருந்தார். அம்மையாரும் செல்லத்துரையும் வீட்டின் உட்புறத்தில் அமர்ந்து தூங்கிக்கொண்டிருந்தனர். இச்சமயத்தில் அம்மையாரின் கனவில் அம்மன் தோன்றி "இங்கே படுத்திருப்பது என் தவப்பிள்ளை அல்லவா? அவனை இருட்டில் விட்டு விட்டு நீங்கள் தூங்குகிறீர்களா? அவனுக்கு முன்னால் ஒரு விளக்கை வைத்துவிடுங்கள் எனக்கூறவும் அம்மையார் நித்திரையிலிருந்தும் திடுக்கிட்டு எழுந்து கணவரைத் துயில் எழுப்பி விபரத்தைக் கூறினார். அம்மனின் கட்டளையை ஏற்றுக் கொண்ட அத்தம்பதியினர் தாம் செய்த பிழையைப் பொறுத்தருளுமாறு அம்மனைப் பணிந்து வேண்டிக்கொண்டு சுவாமிகளருகில் ஒரு விளக்கையும் ஏற்றி வைத்து மனமுருகி வணங்கிச்சென்றனர்.

குழந்தைக்கு கஞ்சி வார்த்ததை கைதடிக்கலை
குழந்தைக்கு சீராட்டி உடுபுடவை கொடுத்ததை கைதடிக்கலை
குழந்தைக்கு தூக்கத்தின்போது விளக்கேற்றி வைத்ததை கைதடிக்கலை

சுவாமிக்கும் செல்லம்மா அம்மையாருக்கும் உள்ள தொடர்பு தாய் சேய் தொடர்பாயிற்று.

காலேற் பிறந்த தயவான கந்தவனம் பால் நினைத்தூட்டும் தாயு மான நிகழ்வுகள் எடுத்துக் காட்டத் தொடங்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு பலவாகியும் தங்களுக்கு இதுவரை புத்திரபாக்கியம் கிட்டவில்லையே என்று மனக்குறை செல்லத்துரை தம்பதியினரை வாட்டியது. திருவுளம் கொண்ட அம்மன் ஒரு நன்னிரவு அவரது கனவில் தோன்றி "நீ திருவெம்பாவை விரதமிருந்தால் உனக்குப் பிள்ளை பிறக்கும்" எனக்கூறி மறைந்தார். இவ்வாறு இருவரும் விரதம் இருந்து பத்து நாளும் அடியவர்களுக்கு அமுது அளித்து வந்தனர். பத்தாம் நாள் அம்மையார் கணவருடன் அமுதளிப்பதற்கேற்ற அடியவர் ஒருவரையும் எதிர்பார்த்திருந்தனர். என்ன ஆச்சரியம்! தவப்பிள்ளையென அம்மனால் கூறப்பட்ட நமது சுவாமிகள் அத்தம்பதியினர் அதிசயிக்கும்படியாக அங்கு வந்து சேர்ந்தார். தமது விரதம் பலித்துவிட்டதெனப் பேருவகை கொண்ட அம்மையாரும் அவர் கணவரும் சுவாமிகளை நீராடச் செய்து புதுவஸ்திரம் அளித்து அன்று தமது வீட்டில் அமுது செய்தருளவேண்டுமெனக் கேட்டுக்கொண்டனர். சுவாமிகளும் ஏற்றுக்கொண்டார். சற்று நேரம் கழித்து சுவாமிகள் செல்லத்துரை அவர்களைப் பார்த்து "பெரியே செல்லத்துரை இங்கே என்ன விசேடம்" எனக்கேட்டார். அவர்கள் பத்து நாள் விரதமிருந்ததும், சிவனடியார்களுக்கும் அமுது படைத்ததுமாகிய செயல்களை அறிந்து சுவாமிகள் இவ்வாறு கேட்டார். உடனே அம்மையார் தான் கண்ட கனவுக்காட்சிகளை விபரமாகச் சுவாமிக்குக் கூறினார். சுவாமிகள் இதனைக் கேட்டபின் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்தார். பின்னர் அவர்களைப் பார்த்து சுவாமிகள் பின்வருமாறு கூறினார்.

"இந்த ஜென்மத்தில் உங்களுக்குப் பிள்ளைகள் இல்லை. உங்கள் தொண்டு பக்குவமாயிருந்தால் நான்தான் உங்களுக்குப் பிள்ளையாயிருப்பேன்" இந்தத் தாய்சேய் இணைப்பு பன்றித்தலைச்சி அம்மன் வாசலில் சுவாமிகளால் அம்மையாருக்கு திருவடித்தீட்சை வழங்கி குரு, சிஷ்ய இணைப்பாக மாறிற்று. இறுதியில் சச்சிதானந்தருக்கும் கைதடி செல்லம்மா அம்மையாருக்கும் ஆன்மீகப் பாலம் கட்டப்பட்டாயிற்று. இப்பாலம் போட்டபின் சுவாமி அம்மையாருக்குக் கூறியது "கைதடியில் இனத்தவருக்குப் பக்கத்தில் ஒரு குடிசை அமைத்து அங்கு தவம் முடிப்பதே பெருமை" என்பதாகும். அவ்வாறு அமைத்த குடிசையில் ஸ்ரீசச்சிதானந்தரை சிரமேற்கொண்டு அம்மையார் தவமியற்றுங் காலை சுவாமிகளின் பொன்னார் திருவடி அம்மண்ணில், அம்மனையில் பதிந்தன. சுவாமிகளின் புனிதபாதம் பதிந்த மண்ணில் இன்று பிரார்த்தனை மண்டபம், தியான மண்டபம், கோ போஷண கூடம், பாலர் வகுப்பறை, நூல் நிலையம், திருநந்தவனம் எல்லாம் ஒருங்கே அமைந்து "ஸ்ரீசச்சிதானந்த ஆச்சிரமம்" என்னும் பெயருடன் கைதடியின் மத்திய பகுதியை ஒளிரச் செய்து அந்த இடத்தையே "ஆனந்தநகர்" ஆக்கிவிட்டதென்றால் மிகையொன்றுமில்லை.

★ கீழ்த்தரமான செயல் விலக்கு மனப்பான்மையாவது ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனை அடைவதற்கு ''யோக மார்க்கம்'' ஒருவழி என இந்து தத்துவம் பேசுகிறது. எங்கள் சுவாமிகளினதும் பாதையும் அதுவே. யோக தத்துவத்திலே இயம, நியம, ஒழுக்க விதிகளைக் கடைப்பிடித்து மனத்தை வென்றும்போது பிரமத்தை உணரலாம் என்று கூறப்பட்டுள்ளது. ஸ்ரீசச்சிதானந்தசுவாமிகள் அவ்வாறு வாழ்ந்தார் என்பதற்கு அவர் பல்லாயிரம் பாடல்கள் பாடியிருந்தும் ஒரு பாடல் மூலம் அறிந்து கொள்ளலாம்.

''தக்க மாதனத்திலிருந்து குருபரன் தாளை நோக்கி
மிக்க வெண்ணமெறிநிறையுள்ளி உடம்பில்வதித்து நன்று
சிக்கிய மனத்தை நீக்கி நிர்மலப் பிரம்மந்தன்னில்
சொக்கியே நிற்பதன்றோ நல்லருள் ஞான நிட்டை''

இராமலிங்கம் குழந்தைவடிவேலு, J. P.
தலைவர், ஸ்ரீசச்சிதானந்தா ஆச்சிரமம்
கைதடி.

கல்வி என்ற நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு எமது பிள்ளைகளை ஆசிரியர்களிடம் அனுப்புகின்றோம். ஏனென்றால் ஆசிரியர்தான் அவனுக்கு வழிகாட்டி அவனைப் பரீட்சையில் சித்தியடையச்செய்கின்றார். அதேபோல இந்த உலகத்தில் எமது ஆத்மீக வாழ்க்கை என்ற பயணத்தைத் தொடர்வதற்கும் ஒரு குருவினுடைய வழிகாட்டல் எமக்குத் தேவை. ஒரு குருவின் மூலமே எமது ஆத்மீக வாழ்க்கைக்குத் தேவையான திருவருளைப் பெற்றுக்கொள்ளலாம்.

மயில்வாகன சுவாமிகள் குருபூசைதினத்தில்
நல்லை ஆதீனமுதல்வர் ஆற்றிய உரையிலிருந்து.

நல்ல ஆரம்பம் பாதி வெற்றி என்பது பழமொழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்த்தனின் தப்புக் கணக்கு

பாரதப் போர் ஒருவாறு முடிவடைந்து விட்டது. பாண்டவர்கட்கு வெற்றி; நூற்றுவருக்குத் தோல்வி.

போரின் பின் வீமனும், அர்ச்சுனனும் இப்போரில் தங்களது வெற்றிக்குப் பெரிதும் உறுதுணையாயிருந்த கண்ணனைத் தரிசிப்பதற்காக வைகுந்தம் போகிறார்கள். போகும் வழிகள் எங்கும் ஒரே மங்கள ஆரவாரம். இவர்களைப் பெரிதுபடுத்துவோர் எவருமேயில்லை.

இரு வேறு வழியூடாக நிர்மாலியங்கள் (முதல் நாளில் இறைவனுக்கு அர்ப்பித்த, அலங்கரித்த, சார்த்திய மலர்கள், பச்சிலைகள்) கூடைகளிற் சுமந்து கொண்டு சேவகர்கள் வந்து கொண்டிருக்கின்றனர்.

முதலில் ஒருவர் மட்டும் கூடை நிறைந்த நிர்மாலியங்களுடன் வந்து கொண்டிருக்கின்றார். சற்றுத்தூரத்தில் பலபேர் பார்க்க முடியாதவாறு நிறைந்த நிர்மாலியங்களுடன் கூடைகளைச் சுமந்து வந்துகொண்டிருக்கின்றனர்.

அர்ச்சுனனுக்கு ஒரு சந்தேகம். வழியில் நின்ற ஒருவனைப்பார்த்து "இவற்றை எங்கே கொண்டு போகிறார்கள்?" எனத் தெரியாதவன் போற் கேட்கின்றான்.

"முதலிற் போகின்றவன் கொண்டு போவது அர்ச்சுனன் என்பவன் இறைவனுக்குச் சார்த்திய புஷ்பங்கள். அடுத்துப் போகிறவர்கள் எல்லாம் கொண்டுபோவது அவன் அண்ணன் வீமன் என்பவன் இறைவனுக்குச் சார்த்திய புஷ்பங்கள். அவற்றைக் கால் படாத இடங்களிற் சேர்த்துவிடப் போகிறார்கள்" என்றான் வழிப்போக்கன்.

அர்ச்சுனனுக்கு ஒரே ஆச்சரியம். இது என்ன? எந்த வேளையானாலும் இறைவனுக்கு மலர் சார்த்துவதற்குத் தவறாதவன் நான். ஒரு போதும் அண்ணன் மலர் சார்த்தியதை நான் காணவில்லையே என மனதுக்குள் எண்ணிக் குழம்பினான்.

முகக் குறிப்பினால் அதனை உணர்ந்து கொண்ட வழிப்போக்கன் மேலும் சொன்னான். அர்ச்சுனா! நீயோ உன் கையிற் கிடைக்கும் மலர்களைக் குறித்த நேரத்தில் இறைவனுக்குச் சார்த்துவதுடன் மட்டும்

★ வாழ்வு என்னும் மலரில் அன்பு என்பதே தேன். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்திப்பட்டு விடுகிறாய். ஆனால், உன் அண்ணனோ தான் காணும் இடங்களிலுள்ள மலர்களை எல்லாம் எவ்வேளையாயினும் மனத்தினாலேயே இறைவனுக்குச் சாத்தி விடுகின்றான். இப்போது புரிகிறதா? என்றான்.

தன் செயலுக்காகக் கர்வப்பட்டதை நினைந்து மனம் வருந்திய அர்ச்சுனன் உண்மையை உணர்ந்து வழிப்போக்கனாக வந்த கண்ணனின் காலில் விழுந்தான்.

நடந்தவை எதுவுமே புரியாத அண்ணன் வீமனோ தம்பியின் செயலைப் பார்த்துத் திகைத்து நின்றான்.

தொகுப்பு:
ஆ. கதிரமலைநாதன்

## வீர இளைஞருக்கு!

மிகப்பெரிய உண்மை இது


* வலிமைதான் வாழ்வு; * பலவீனமே மரணம்;
* வலிமையே மகிழ்ச்சிகரமான வாழ்க்கை;
* நிரந்தரமான வளவாழ்வு அமரத்துவம் ஆகும்;
* பலவீனம் இடையறாது சித்திரவதையாகவும், துன்பமாகவும்அமைகிறது. பலவீனம் மரணமேதான்!
* நீ எதை நினைக்கிறாயோ அது நீ ஆகிறாய்;
* நீ உன்னைப்பலவீனன் என்று நினைத்தால் பலவீனனாகவே நீ ஆகிவிடுவாய்;
* நீ உன்னை வலிமை உடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவன் ஆகிவிடுவாய்.

படிக்குந்தோறும் எமது அறியாமையை அறிகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதோஷ மகிமை



இறை வழிபாடு குறைகளை நீக்கி நிறைவு தரும். முக்கியமாக புண்ணிய நாட்களில் இறைவனை வழிபடுவது பெரும் பயன் தரும்.

காலத்துக்கு அதிக வலிமையுண்டு. காலமறிந்து ஒரு காரமம் செய்தால் ஞாலமுழுவதும் நமது வசமாகும்.

காலத்தில் செய்வதற்கு அதிக பயன் கிட்டும். "பாலோடாயினும் காலமறிந்து உண்" என்பது ஒரு பழமொழி.

இறைவனை எப்போதும் வழிபட வேண்டும். ஆனால் புண்ணிய தினங்களில் வழிபட்டால்-ஜபம் செய்தால்-ஒன்றுக்குக் கோடி மடங்கு மிகுதியான உயர்ந்த பயன் விளையும்.

சோம வாரம், சிவராத்திரி, தைப்பூசம், பங்குனி உத்திரம், கந்தர் சஷ்டி, வைகுண்ட ஏகாதசி, சூரிய சந்திர கிரகண காலங்கள், திருவாதிரை முதலிய புண்ணிய நாட்களில் அன்புடன் இறை வழிபாடு புரிபவர்கள் பாவங்களிலிருந்தும் நீங்கி புண்ணியம் பெற்று இகம், பரம், வீடு என்ற மும்மை நலன்களையும் எளிதில் பெறுவார்கள்.

விரத நாட்களில் உண்ணாது நோன்பிருந்து ஆலய வழிபாடு செய்து திருமுறைகளை ஓதி, திருவைந்தெழுத்தை ஜபிக்க வேண்டும்.

1. ஆலய வழிபாடு — உடல் நலமும்.
2. திருமுறைகள் ஓதுவது — வாக்கு நலமும்,
3. பஞ்சாட்சர ஜபம் — மன நலமும்

தந்து நம்மைக் காக்கும்; வினைகள் விலகும்; அருளாற்றல் உண்டாகும். மார்க்கண்டேயர் சிவவழிபாடு செய்து காலனை வென்று வீடுபேறு பெற்றார்.

## பிரதோஷ வரலாறு

தேவர்களும் அசுரர்களும் ஒருவரை ஒருவர் பகைத்துப் போர் புரிவார்கள். தேவர்கள் நரை, திரை, மூப்பு, மரணம் என்ற துன்பங்கள்

இன்றி வாழ விரும்பினார்கள். இவை அணுகாமல் வாழ வேண்டுமானால் சிவமூர்த்தியை வேண்டினால் இறைவன் ஒரு சொல்லால் இவற்றை அருள்வான்.

இந்தச் சுருக்கமான நெறியை அறியாத தேவர்கள் பிரமதேவனிடம் சென்று தங்கள் கருத்தை அறிவித்தார்கள்.

பிரமதேவர், தேவர்களுடன் திருமாலிடம் சென்று ''சாவா மூவா நலம் பெற என்ன வழி?'' என்று வினவினார்.

திருமால் ''திருப்பாற்கடலைக் கடைந்து அமிர்தம் உண்டால் மரணமின்றி எப்போதும் இளமையுடன் வாழலாம்'' என்று ஆலோசனை கூறினார்.

இந்திராதி தேவர்கள், திருப்பாற்கடலை அடைந்து பாற்கடலைக் கடைய முயன்றார்கள். மந்திரகிரியை மத்தாகவும் வாசுகி என்ற நாகராஜனைத் தாம்புக்கயிறாகவும் அமைத்தார்கள்.

திருமால் கூர்மமாகி மந்திரகிரியைத் தம்முதுகில் தாங்கினார். அசுரர்கள் வாசுகியின் தலைப்புறமும், தேவர்கள் வால்ப்புறமும் நின்று கடையலானார்கள்.

அந்த நாள் தசமி திதி அன்று ஒரு வேளையுண்டு திருப்பாற்கடலைக் கடைந்தார்கள். மறுநாள் ஏகாதசி பதினோராவது திதி.

பாற்கடலைக் கடைந்தபோது, வாசுகி வருத்தம் தாங்காமல் பதைபதைத்து நஞ்சை உமிழ்ந்தது. கடலிலிருந்தும் நஞ்சு தோன்றியது.

வாசுகி கக்கிய ஆலமும், கடலில் தோன்றிய ஆலமும் ஒன்று சேர்ந்து ஆலாலம் என்ற பெயர் பெற்றது.

இந்த ஆலாலம் மிக்க பயங்கரமாக வெப்பத்துடன் உலகத்துக்கே நாசம் செய்வது போல் விண்ணவரை விரட்டிட, வலமாகவும், இடமாகவும் மறித்துத் துரத்தியது, திசைதோறும் தேவர்கள் நடுங்கி ஒடுங்கி ஓடினார்கள்.

வெண்ணிறமாக இருந்த விஷ்ணுமூர்த்தி விஷவேகத்தால் நீல நிறம் ஆனார். வானவர்கள் அஞ்சி திருக்கயிலாயம் சென்று அரனாரிடம் அடைக்கலம் புகுந்தார்கள்.

தஞ்சம் புகுந்த வானவர்கள், ''தேவ! தேவ! மகாதேவா! அருட் பெருங்கடலே! கருணைக் குன்றே! தேவரீர் ஆண்டான்; நாங்கள் அடிமைகள்; நாங்கள் பாற்கடல் கடைந்தோம். அந்த வியவசாயத்தில் முதலில் விளைந்தது தேவரீருக்கு உரியது'' என்று கூறி முறையிட்டார்கள்.

கருணையே வடிவான கண்ணுதற் கடவுள் தமது அருகிலிருந்த சுந்தரரைப் பார்த்து, ''சுந்தரா! அவ்விடத்தை இவ்விடத்துக்குக் கொண்டு வா'' என்று பணித்தருளினார்.

---

★ சொல்லின் மேன்மை செயலில் தெரிய வேண்டும். ★

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுந்தரர் மாலயனாதி வானவர்களால் அணுக முடியாத அதிபயங்கரமான கொடிய விஷத்தை நாவலிப்பழம் போலத் திரட்டி உருட்டிக் கொணர்ந்து சிவபெருமானிடம் தந்தார்.

இறைவன் அந்தக் கொடிய விஷத்தை அடியவர்களான அமரர்கள் உய்ய அமுதம் போல் உண்டருளினார். அந்த விஷம் உள்ளே சென்றால் உள்முகத்தில் உள்ள ஆருயிர்கள் அழிந்துவிடும். உமிழ்ந்தால் வெளி முகத்தில் உள்ள ஆருயிர்கள் அழிந்துவிடும். ஆதலால் உண்ணாமலும், உமிழாமலும், கண்டத்தில் தரித்தருளினார். அதனால் எம்மானுடைய செம்மேனி கண்டம் கரியதாக ஆயிற்று. அது காரணமாக அவர் மணி கண்டர், நீலகண்டர் என்று பேர் பெற்றார்.

சிவபெருமானுடைய கருணைக்கு உதாரணம் இது ஒன்று போதாதா? எம்பெருமான் நஞ்சுண்டருளிய கருணைத்திறத்தை நால்வர்களும் மற்றைய ஆன்றோர்களும் புகழ்ந்து கூறியுள்ளார்கள்.

இறைவன் ஆலகால விஷத்தை உண்ணவில்லையாயின் பிரமா, விஷ்ணு, இந்திராதி தேவர்கள் அன்றே மாண்டிருப்பார்கள். எல்லோருடைய கண்டத்தையும் காத்த பிரான் கண்டம் கறுத்தது.

இந்த விஷத்தின் வெம்மையால் திருமால் நீல நிறம் பெற்றார். அதற்கு முன்பு அவர் வெண்மை நிறத்துடன் இருந்தார் என்று புராணங்கள் கூறுகின்றன.

---

★ [illegible] ★

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு தேவர்கள் பொருட்டு சிவபெருமான் ஆலால விஷத்தை உண்டருளியது ஏகாதசி மாலை நேரமாகும்.

## மீண்டும் பாற்கடல் கடைந்தது

சிவபெருமான் தேவர்களை நோக்கி மீண்டும் சென்று திருப்பாற் கடலைக் கடையுமாறு பணித்தருளினார். அவ்வாறே அமரர்களும், அசுரர் களும் மீண்டும் திருப்பாற் கடலருகில் சென்று நின்று முன்போலவே கடலைக் கடையத் தொடங்கினார்கள்.

பாற்கடலிலிருந்து லக்ஷ்மி, ஐராவதம், காமதேனு, கற்பகத்தரு, சிந்தாமணி, கௌஸ்துபமணி, சூடாமணி, உச்சைச்ரவம் என்ற குதிரை முதலியன ஒவ்வொன்றாகத் தோன்றின. லக்ஷ்மியைத் திருமால் ஏற்றுக் கொண்டார். ஏனைய பொருள்களை இந்திராதி தேவர்கள் அடைந் தார்கள்.

ஏகாதசியாகிய அன்று இரவு முழுவதும் அவர்கள் உறக்கம் இன்றிப் பாற்கடலைக் கடைந்தார்கள். மறுநாள் துவாதசியன்று அதிகாலையில் அமிர்தம் தோன்றியது. அதனைத் தேவர்கள் பகிர்ந்து உண்டார்கள். அமிர்தம் உண்ட அமரர்கள் அந்த மகிழ்ச்சியினால் துவாதசியன்று ஆடியும், பாடியும் பொழுதைப் போக்கினார்கள்.

## பிரதோஷம்

மறுநாள் திரியோதசி பதின்மூன்றாம் நாள், தேவர்கள் சிவபெரு மானை வணங்காமல் பொழுதுபோக்கிய தங்கள் குற்றத்தை உணர்ந்து சிவபெருமானிடம் சென்று பணிந்து தங்கள் குற்றத்தை மன்னித்தருளு மாறு வேண்டினார்கள்.

பரமகருணாநிதியாகிய சிவபெருமான் மகிழ்ந்து தேவர்களுக்கு அருள் புரியத்திருவுளம் கொண்டு கயிலையில் அன்று மாலை (4 - 30 மணி முதல் 6 மணி வரை) பிரதோஷ வேளையில் தம் திருமுன் இருந்த ரிஷப தேவரின் இரு கொம்புகளுக்கு இடையில் நின்று அம்பிகை காணத் திரு நடம் செய்தருளினார். தேவர்கள் அதனைத் தரிசித்து சிவபெருமானைத் துதிசெய்து வணங்கினார்கள். அது முதல் திரியோதசி தினமன்று மாலை நேரம் பிரதோஷ காலம் என்று வழங்கலாயிற்று. (பிரதோஷம் - பூஜாவி முக வேளா பாவத்தைப் போக்கும் நேரம்.)

பிரதோஷம் என்ற விரதம் சிவமூர்த்திக்கு உரிய பலவித விரதங் களில் தலையாயது. இந்த விரதத்தை அனுஷ்டிப்பவர்கள் துன்பங்களி லிருந்து நீங்கி இன்பம் எய்துவார்கள்.

தொகுப்பு: சந்நிதியான் ஆச்சிரமம்

★ தானம் என்பது பிரதி பலன் கருதாத கொடை. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாலு யுகங்களிலும் வாழ்ந்த மனிதர்கள் பற்றிய வரலாற்றையும் வடபாகத்தில் அமைந்துள்ள கிரேதகா யுகம் பற்றிய வரலாற்றையும்

## புலிப்பாணி முனிவர் தன் பாக்களின் மூலம் விளக்குகிறார்.

---

"பாரே நீ யுகந் தோறுஞ் சொல்லக் கேளு
பண்பான மேருவுக்கு வடபாகத்தில்
நீரே நீ மனிதரப்பா தங்கவண்ணம்
திகழ் மதியா முயரமப்பா சொல்லக்கேளு
காரே நீ நாலாயிர முழமே யாகும்
வளமான வாலங்கனி யந்நீரோடே,
சீரே நீ மருந்துவது மதுதானப்பா
சிறப்பான சதாசிவமே தெய்வந்தானே." (1)

"தானாகும் வயதுதான் நாலு லட்சம்
தாயாகச் சத்தியத்தைக் கைவிடாதார்
கோனான பொய் யொன்றுஞ் சொல்லிடாதார்
குவலயங்கள் தொல்லையில்லால் வேறொன்றில்லை
சேனான மேருவுக்கு வடபாகத்தில்
சேலான மனிதருடை செய்கையப்பா
தேனான போகருடை கடாட்சத்தாலே
தெளிவாகப் புலிப்பாணி விளம்பினேனே." (2)

"பூ" வெனப் போற்றும் பூமாதேவியின் மையஸ்தானத்தில் உலகத் தோற்றத்தின் முதல் வித்தாய் அனைத்துலக வளங்களையும் ஆக்கமாக நிலையினையும், மிக்க தோற்றத்தினையும் வனப்பினையும் வளந்தரும் வல்லமையினையும் உடைத்தாய் இலங்கா நிற்கும் உயர்ந்த பாகத்தினை "மேருமலை" யென்பர். அம்மலைக்கு காந்தம், சிவம் என்னும் பிறநாமங்களுமுள. அம்மலையின் வடிவமும் சிவாலயத்தின் கண்ணுள்ள சிவலிங்கத்தின் வடிவமும் ஒரே தன்மையின. அம்மலையின் நான்கு திசைகளிலுமுள்ள நான்கு பூபாகங்களும் ஒவ்வோர் காலங்களில் பல்வகைப்பட்ட செல்வங்களுடனும் பல்வேறு வகைப்பட்ட ஜீவராசிகளுடனும் சிறந்து விளங்கியதாகவும் மாகா தபசியும் சித்தருமாகிய புலிப்பாணி முனிவருடைய பாக்கள் மூலம் நாம் அறிகின்றோம்.

---

★ பண்பில்லா வாழ்வு பெருக்கு நோயாகும். ★

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நான்கு பெரிய பூபாகங்களில் வடதிசையின் கண்ணுள்ள பூபாகத்தை ஆகாசமண்டலம் என்பர். அது சிறந்து விளங்கிய காலத்தினைக் கிரேதாகா யுகமென்றும் கந்தபுராண காலமென்றும் ஆதாம். ஏவாள் என்போர் சம்பந்தமாகவுள்ள நிகழ்ச்சிகளும் கிரேதகா யுகத்திற்குரியனவென்றும் அதிபுண்ணிய யுகமாயிருந்தமையால் அக்காலத்திற் பாவத்திற்குரியனவாய் எக்கிரியைகளையும் செய்யாதோராய் பிராமணர் மாத்திரம் வசித்தனர். அப்பிராமணர் பிரம்மா முகத்தினின்றும் தோன்றினாரேயென்றும் மேருவின் வடபாகத்தை பிரம்மாவின் பிரதேசமென்றும் மறைகள் கூறுகின்றன.

அப்பிராமணர் தங்க வண்ணத்தினர் என்றும் நாலாயிரம் முழம் உடையவர்களென்றும் நாலு இலட்சம் வருடங்களைத் தமது சீவிய காலமாகக் கொண்டோரென்றும் ஆலங்களிலே உண்போரென்றும் சதாசிவ வழிபாடுடையோரென்றும் மிகுந்த சத்தியமுடையோரென்றும் மேலே காட்டிய;

"பாரே நீயுகந் தோறும்... ...தெய்வந்தானே
"கானாகும் ... ...புலிப்பாணி விளம்பினேனே

என்னும் செய்யுட்களால் அறியலாம்.

இத்தகைய பிராமணர் வசித்த காலமாய கிரேதகா யுகத்தின் ஈற்றில் (1728000- வருடங்களின்பின்) ஒரு சலப்பிரளயம் உண்டாயிற்று. அப்பிரளயத்தினால் காந்தத்தில் (மேருமலையில்) வடபாகத்தில் வசித்த சீவராசிகள் முழுவதும் ஒருங்கே மறைப்போக மனுவும் அவன் குடும்பத்தவரும் மாத்திரம் தப்பியோடி அம்மலையின் கிழக்கின் கண்ணுள்ள பெரும் பூபாகத்தினை அடைந்தனர். அதனை வாயுமண்டலமென்பர். ஸ்காந்தத்தில் (காந்தமலை) சிங்கமுகாசுரன் வடமேற்குத் திசையிலுள்ள ஆசுரம் என்னும் நகரிலிருந்து வந்தான் என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த ஆசுரம் அந்த ஆசுரந்தானோவென்று எண்ணத்திடக்கின்றது. சிங்கமுகன் சிவபக்தியுடையவன். ஆதலால் ஆசுரத்தாரது பிரதான தெய்வமாகிய பிறைச்சந்திரனை முடியிற் சூடிய சிவ என்னுந் தெய்வம் சந்திரனை உருவகப்படுத்திய தெய்வமோ அன்றேல் சந்திரசேகரன் தானோவென்று ஐயுறவேண்டியிருக்கின்றது. எல், வேல், ஆதர். ஏலா (பராஅயன) மனர் என்னும் மொழிகளும் ஆராயற்பாலன.

கற்பகக்கா நிழலில் வைகுவாரேனும் அமராவதி நகரத்தாரது வாழ்க்கை அவ்வளவு சிறந்ததாகக் காணப்படவில்லை. புராணேதிகாச சரித்திரங்களை ஆராயுமிடத்துப்போல் விண்ணவர்நாட்டுச் சரித்திரத்தை யாராவது எழுதுவோமாயின் அங்குள்ளார் அமிழ்துண்டு அழியாநிலை பெற்றிருக்கும் வாழ்நாளிற் பெரும்பாகத்தை அடிமைத்தனத்திலும் சிறைவாசத்திலும் கழித்ததாக எழுதவேண்டிவரும். (தொடரும்)

"சிவம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே.....

இது சிவபுராணத்தின் ஒரு அடி. இந்த வரிக்குப் பல நூல்களிற் போடப்பட்டுள்ள கருத்துக்கள் எனது மனத்திற்குத் திருப்தி தரவில்லை. பரவலாக நூல்களில் உள்ள கருத்துக்கள் வருமாறு;

“நடு இரவில் மயானத்தில் நடனமாடும் சிவபெருமானே... ” என்று அது அமைகிறது. இந்தக் கருத்தை மணிவாசகப் பெருமான் கூறி இருப்பாரா என்பதே என் மனத்தில் எழுந்த சந்தேகம். ஏனெனில் மணிவாசகர் அரிய பெரிய தத்துவக் கருத்துக்களை மிக எளிதாகத் தமது திருவாசகத்திற் பொதிந்து தந்துள்ளார். அவர் இப்படியான ஒரு சாதாரண கருத்தைத் தந்திருப்பாரா?

இது பற்றிப் பலருடன் ஆலோசித்துள்ளேன். ஆனால் திருப்தியான பதில் எனக்குக் கிட்டவில்லை. சிவபுராண பாராயணங்களின் போது இது பற்றிச் சிந்தித்து வந்தேன். ஒரு நாள் பாராயணத்தை முடித்து நான் தியானம் இருந்த வேளை ஒரு புதிய கருத்துத் திடீரெனத் தோன்றியது. இது சரியானதா? இக் கருத்து வேறேதாவது நூலில் உள்ளதா? என்ற ஐயப்பாடு என் மனத்தில் உள்ளது. ஆகவேதான் “ஞானச் சுடர்” மூலம் சமய அறிஞர்களைத் தொடர்பு கொண்டு அபிப்பிராயங்களை அறிய முயல்கிறேன். இந்த மார்கழி மாதத்தில் மணிவாசகப் பெருமானை நினைப்பதும் பொருத்தமாக அமையும்.

எனக்குத் தோன்றிய கருத்து இதுதான்;

நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் 3 நிலையில் இருக்கிறோம். (1) விழிப்பு நிலை (2) கனவு நிலை (3) ஆழ்ந்த உறக்க நிலை.

1. விழிப்பு நிலை:

சாதாரணமாக நாம் உணரக் கூடிய நிலை. எமது உடலிலுள்ள 24 தத்துவங்களும் செயற்படும் நிலை.

2. கனவு நிலை:

எமது உடல் சோர்ந்து நித்திரையாகும் போது உடல் மட்டுமே சோர்ந்து விடுகிறது. ஆனால் மனம் உடனே அயர்ந்து விடுவதில்லை. அதற்குத் தனித்து நின்று தொழிற்படும் திறமை உண்டு. ஞானேந்திரியங்களும் கர்மேந்திரியங்களும் சோர்வடைந்து அயர்ந்து போனாலும்,

★ ஆடம்பரச் செலவு ஆளை அடிமையாக்கும். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் அவற்றின் தொழிற் பாடுகளையும் தானே ஏற்றுச் சில அனுப வங்களைப் பெறுகிறது. கண், காது, வாய் முதலிய உறுப்புக்கள் கனவு நிலையில் செயற் படுவதில்லை. ஆனால், கனவில் ஒருவரைப் பார்க்கி றோம். அவர் பேசுவதைக் கேட்கிறோம், நாமும் ஏதோ கூறுகிறோம். இவை முழுக்க மனத்தின் தொழிற்பாடே. ஒவ்வொரு நாளும் நாம் சாதாரணமாக 30 கனாக்கள்வரை காண்கிறோம் என மருத்துவர்கூடக் கூறுகின்றனர். ஆனால், எமது நினைவுக்கு வருவதில்லை. சரீரத்தைத் தவிர இந்நிலையில் எமது அந்தக் கரணங்கள் நான்கும் தான் தொழிற் படுகின்றன.

3. ஆழ்ந்த உறக்கநிலை :

இந்த நிலையில் மனமும் அமர்ந்து போய்விடுகிறது. அந்தக் கரணங்களும் ஒடுங்கிவிடுகின்றன. பிரக்ஞை மட்டுமே இருக்கும் இந்த நிலையில் எமது உலகியல் தொடர்புகள் எவையுமே இரா. பட்டம், பதவி, கல்வி, குலம், கோத்திரம், அந்தஸ்து, பணம், சொத்துக்கள், சமயம், கௌரவம், போன்ற எவையுமே ஞாபகத்திற்கு வரா. எல்லாம் ஒருசமத்துவநிலை, ஆத்மநிலை, இறைநிலை. இந்தநிலையில் எமது உடலினுள்ளே நடைபெறும் வேலைகள் எல்லாம் ஒழுங்காக- தாளம் தப்பாமல் நடைபெறுகின்றன. இருதயம் இயங்குகிறது, இரத்தோட்டம் நடைபெறுகிறது, (சுவாசம்) நுரையீரல் வேலைசெய்கிறது, சமிபாட்டுத் தொகுதி வேலைசெய்கிறது. சிறுநீர்த்தொகுதி வேலைசெய்கிறது. ஆகவே, எமது உடலின் உள்ளே நடைபெறும் வேலைகள் ஒழுங்காக ஆழ்ந்த உறக்கநிலையிலும் நடைபெறுகின்றன.

இவற்றை எம்மால் கட்டுப்படுத்தவோ, நிறுத்தவோ முடியாது இவை எமக்கு உள்ளே இருக்கும் இறைவனாலேயே நடத்தப்பட்டு வருகின்றன. அவனால்தான் இந்தச் செயற்பாடுகளை நிறுத்தமுடியும், நின்றால் உயிர் இல்லை.

ஆகவே, நள்ளிரவில்,- நாம் ஆழ்ந்த உறக்க நிலையில் இருக்கும் போதும், பயிற்சிபெற்ற நடனக்காரர்போல, தாளம்தப்பாது, ஒழுங்காக எமது உடலுக்குள்ளே நடைபெறும் மேற்படி செயற்பாடுகளைச் செயற்படுத்துபவன் எமக்குள்ளே இருக்கும் இறைவனே !!

இந்த இறைவனைத்தான் மணிவாசகர் ''நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே……..'' என விளித்தார்.

இக்கருத்தை உங்களுடன் பகிர்ந்து கொண்டு அபிப்பிராயங்களை எதிர்பார்க்கிறேன்.

S. R. சரவணபவன்
பிள்ளையார் கோவிலடி,
நாவடி.

★ சிரிப்பில் அடக்கமும் சிந்தனையில் தெளிவும் தேவை. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாத்திரை

சைவமக்கள் புனித தலங்களைக் குறித்து யாத்திரை செய்வது படிப்படியாக மிக அருகிவிட்டது. இப்படி அருகியதற்கு அரசியல், சமுதாய நெருக்கடி பிரதான காரணம் எனலாம். இக்காரணத்தைத் தவிர யாத்திரையின் அவசியம் - அருமைபெருமை என்பனவும் உணரப்படாமல் இருப்பதும் பெருங்காரணமாகவே உள்ளது. ஏனென்றால் பணத்தின் அவசியத்தை நன்கு உணர்ந்ததனால் நம் சைவசமய மக்கள் அரசியல் சமுதாய நெருக்கடிகளைப் பொருட்படுத்தாது வெளிநாடுகளுக்குச் சென்று வருகின்றனர். யாழ் வர இயலாத நிலையில் கொழும்பிலோ, இந்தியாவிலோ உறவினரைச் சந்திக்கின்றனர். இப்படி இந்தியா செல்பவர்கூட அங்கு புனிததல வழிபாடு செய்வதில் அக்கறையாயில்லை. பட்டணம் செல்லும் கிராமத்தான் பலவற்றையும் வியப்புடன் பார்த்து வருவது போலத் தாம் செல்லுமிடங்களில் சில கோவில்களைக் கண்டு வருகின்றனர். இந்நிலை மாறி புனிதயாத்திரை மேற்கொண்டு சந்தர்ப்பவசமாகப் புனிததலங்களைத் தரிசிக்கும்போது சிரத்தையுடன் சிலநாட்களையும் சிறிது பொருளையும் தியாகம் செய்து தெய்வீகத்தை அறிய அநுபவிக்க முயலவேண்டும்.

நம் முன்னோர் தம் வாழ்வில் பலதடவை சிதம்பரயாத்திரை மேற்கொண்டிருக்கிறார்கள். அதனால் உண்டான சிதம்பர ஈடுபாடு காரணமாக பலகாணிகளைச் சிதம்பரத்திற்குத் தருமசாதனமாய் வழங்கியுள்ளனர். தம் பிள்ளைகள் முதலியோருக்குச் சிதம்பரம் தொடர்பான பெயர்களைச் சூட்டியிருக்கின்றனர். பலதடவை சிதம்பரயாத்திரை செய்தவர் மதுரை திருவண்ணாமலை, பழனி, திருச்செந்தூர் முதலிய தலங்களையும் முறைப்படி தரிசித்திருக்கிறார்கள், சிலர் காசியாத்திரையும் செய்துள்ளார்கள். [illegible] ஒரு கிராமத்தில் சிதம்பரயாத்திரை செய்தவர் பலரும் காசியாத்திரை செய்தவர் ஒருவராவதும் ஒவ்வொருகாலத்திலும் தொடர்ச்சியாக இருந்திருக்கிறார்கள் இக்காலத்தில் யாத்திரைக்குச் செலவழிக்கும் பணத்தை மிச்சம்பிடித்து வைத்திருந்தால் ஒரு பிள்ளையின் சீதனத்தை அதிகரித்துக் கொடுக்கலாமே என்று எண்ணுமளவுக்குச் சீதனம் கொடுத்தல் முதன்மைப்பட்டதும் நம் சமூகத்தின் ஒரு சாபக்கேடாக உள்ளது.

சிரத்தையுடனும் புனிதமான நோக்கோடும் நம் முன்னோர் கதிர்காமயாத்திரை மேற்கொள்வதால் பெறும் தெய்வீக இன்பத்தைக் கூட அறியாதவர்களாய்ப் புராணகால விடயங்கள் போல அரதத்தே கருது

சுற்றம் சமயத்தில் உதவுவதே உண்மை உறவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர்களாயி உள்ளோம். இந் நிலைமாறி நம் ஒவ்வொருவர் வாழ்விலும் தெய்வ அநுபவங்கள் பெறவும் எளிதில் பெறத்தக்க பல உலக அநுப வங்களை அடையவும் யாத்திரை அவசியம். தெய்வீகக் குறிக்கோளுடன் யாத்திரை செய்தால் தெய்வம் வெளிப்பட்டு அருள்வது உறுதியென்னும் உறுதி திருநாவுக்கரசர் கயிலை யாத்திரைக்கு எவ்வளவு சிரமம் எடுத்தார் என்பதைச் சிந்திக்க வேண்டும். சிரமப்பட்டு மேற்கொண்ட அந்த யாத்திரையால் அவர் பெற்ற மேலான பயனையும் அவதானிக்க வேண்டும் ஒவ்வொருவரும் சிரத்தை, தியாகம், பக்தி, புனிதம் என்பவற்றுடன் கூடிய புனித யாத்திரையினை அவ்வப்போது மேற்கொண்டு மேலான அநுப வங்களை அடைந்து மனிதப்பிறவியைப் பயனுடையதாக்க வேண்டும்.

பண்டிதர் தி. பொன்னம்பலவாணர்

---

## சோமாஸ்கந்த மூர்த்தம்

முருகப்பெருமான் தனது தாய் தந்தையாகிய சிவன், உமை இரு வர்க்கும் நடுவில் இருந்து காட்சிதரும் மூர்த்தமே சோமாஸ்கந்த மூர்த்தம் ஆகும். இம்மூர்த்தம் ஸ + உமா + ஸ்கந்தா எனப் பிரிக்கப்பட்டு உமை முருகன், இறைவன் எனப்பொருள் கொள்ளப்படும். இத்திருமேனி எல்லாக் கோயில்களிலும் பெரும்பாலாக வைத்து வழிபாடாற்றப்படுகின்றது.

இம்மூர்த்தம் அருமை, எளிமை, அழகு எனும் தத்துவங்களை விளக்கி நிற்கின்றது. அதாவது அருமை — சிவன், எளிமை — சக்தி, அழகு — முருகன் என்பன. அவை கடந்தநிலை, கலந்தநிலை, கவர்ந்தநிலை மூன்றையும் விளக்கும். கடந்த நிலையாவது எல்லாவற்றிற்கும் அப்பாற் பட்டு நிற்கும் நிலை இது சிவனையும், எல்லாவற்றுடனும் இயைந்து நிற்கும் நிலையாகிய கலந்தநிலை சக்தியையும், தம்மை வழிபடுவோருக்கு காட்சி தந்து அவர்களோடு இணைந்து நிற்கும் நிலையாகிய கவர்ந்த நிலை முருகனையும் இப்பொழுதும் உண்மை, நன்மை, அழகு என முறையே சிவன், சக்தி, முருகன் என பண்புகளை உணர்த்தி நிற்கின்றன.

இம் மூர்த்தம் உணர்த்தும் தத்துவங்களில் இன்னுமோர் உண்மை குடும்ப தத்துவமாகும். கணவன், மனைவி, குழந்தை ஆகிய முப்பொருள் தன்மையே இல்லறவாழ்வின் சிறப்பு ஆகும். இவ் வாழ்வின் சிறப்பினையே சிவன், உமை, முருகன் ஆகிய மூன்று திருமேனிகளும் இணைந்து இருக்கும் சோமாஸ்கந்த மூர்த்தம் உணர்த்துகின்றது.

செல்வி R. ஆஷா

---

★ கொடுக்கும்போது கனிவு இருத்தல் வேண்டும். ★

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வச்சந்நிதி முருகன்பேரில் பாடப்பட்ட கீர்த்தனைகள் (முற்றொடர்)

1. இராகம்: காம்போதி  **பல்லவி**  தாளம்: ரூபகம்

செல்வச்சந்நிதி முருகனை நீ
  தினமும் பணிவையே — நெஞ்சமே (செல்வ)

**அநுபல்லவி**

அல்லும் பகலும் அநவரதமும் நீ
  அழுது தொழுது அவன்புகழ் பாடியே (செல்வ)

**சரணம்**

தொண்டைமானாற்றுப் பதியினிலே
  துதிப்பவர்க்கருள் மழை பொழிந்திடுவான்
அண்டர் தமக்கரியனாய்
  அடியவர்க் கெளியனாய்
ஒருகால் அழைத்திடு வோர்க்கு
  இருகாலுடன் துணைவருவான் (செல்வ)

2. இராகம்: சிவரஞ்சனி  **பல்லவி**  தாளம்: ஆதி

செல்வச்சந்நிதி முருகன் தேரில் வருகிறானடி — அதை
  நேரில் நின்று பார்க்கும்போது
நெஞ்சை உருக்கும் தோற்றமடி.

**அநுபல்லவி**

புள்ளிமயில் மீதில் பவனி வருகிறானடி — கான
  வள்ளி தெய்வயானையையும்
மணமுவந்து அருகில் இருத்தி (செல்வ)

**சரணம்**

காவடி கரகங்கள் எடுத்து ஆடுகிறாரடி — பக்தர்
  கூடிக்கூடி முருகன் பஜனை பாடுகிறாரடி
பாவ வினைகள் தீர்க்கக் கரம்
  கூப்பிவணங்குவார் — கோவில்
வீதியெங்கும் அணிதிரளும்
  விந்தைபாரடி (செல்வ)

ஆக்கம்: சி. ஆனந்தராசா
இளைப்பாறிய ஆசிரியர்
உடுப்பிட்டி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலியுகக் கந்தன்

# சந்நிதி முருகன்

(சென்ற இதழ் தொடர்ச்சி...)

**19-04-1996** வெள்ளிக்கிழமை காலை 9-00 மணியையும் அண்மித்துக்கொண்டிருந்தது. சூரியன் கிழக்கு வானில் உதித்து மேகங்கள் அற்ற வானப்பரப்பில் பிரகாசத்துடன் மேலே கிளம்பிக்கொண்டிருந்தான். அன்று வெள்ளிக்கிழமையாக இருந்தபடியினால் பிரச்சினைகள் பதட்டங்களுக்கு மத்தியிலும் சந்நிதி கோவிலின் அன்றைய பூசைக்குரிய பூசகர்கள் பூசையை நடாத்துவதற்கான முன் ஆயத்தங்களைச் சுறுசுறுப்பாக, அதேநேரம் மனதில் ஒருவித பயத்துடன் செய்து கொண்டிருந்தனர். ஏனென்றால் அந்தக் காலகட்டத்தில் ஷெல் வீச்சுக்கள் கோவில் அமைந்திருந்த பகுதியிலும் நடைபெற்றுக் கொண்டேயிருந்தன. செல்வச் சந்நிதியில் மட்டுமல்லாது தொண்டைமானாற்றுப் பகுதி முழுவதிலுமே வெள்ளிக்கிழமைகளில் ஒருவித பக்திச் சூழல் காணப்படும்.



★ புண்ணியம் இல்லாத கண்ணியம் கலவரத்தை உருவாக்கும். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசடி, பிரதான வீதி, தொண்டைமானாறு என்ற விலாசத்தில் தனியாக குடியிருந்த திருமதி பொன்னுச்சாமி தங்கரத்தினம் அவர்களும் தனது வீட்டைப்பெருக்கி சுத்தமாக்கி தனது அன்றாடக் கடமைகளைச் செய்து கொண்டிருந்தார். நேரம் காலை 09-15 ஐ தாண்டி விட்டது. வெள்ளிக்கிழமையாக இருந்தமையால் வழமைபோல அன்றும் அடுப்பு மெழுகுவதற்காக பசு மாட்டுச் சாணத்தை வெளியில் சென்று எடுத்துக்கொண்டு தங்கரத்தினம் அவர்கள் தனது வீடு நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தார். வீட்டிற்கு வருவதற்கு இன்னும் ஏறத்தாழ 40 மீற்றர் தூரம் இருக்கும். அந் நேரத்தில் வானத்தில் திடீரென ஒரு குண்டு வீச்சு விமானம் தோன்றியது. ஆம் அது ஒரு கிபிர் குண்டு வீச்சு விமானம். ஒரே நேரத்தில் பல குண்டுகளை வீசிப் பரந்த பிரதேசத்தைத் தாக்கக் கூடிய வல்லமை கொண்டது. அத்தகைய அந்தக் குண்டுவீச்சு விமானம் இரைச்சலுடன் தாழப்பறந்து மிக வேகமாக வந்து கொண்டிருந்தது. ஆனால் அது திருமதி தங்கரத்தினம் அவர்கள் இருக்கும் இடத்தை இலக்கு வைத்து பதிந்து வருவதையும் அதனால் தனக்கு ஏற்படப் போகும் ஆபத்தையும் அவர் தெரிந்து கொள்ளவில்லை. சில நாட்களாக வானத்தில் அடிக்கடி ஏற்படுகின்ற சத்தங்கள், இரைச்சல்கள்தான் அவை என நினைத்த அவர் மேலும் வீடு நோக்கி நெருங்கிக் கொண்டிருந்தார்.

"திடீரென அவருக்கு முன்னால் சைக்கிளில் தென்பட்ட ஒருவர் தனது சைக்கிளை வீதி ஓரத்தில் வீசி எறிந்து விட்டு விழுந்து படுக்குமாறு ஆவேசத்துடனும், பதற்றத்துடனும் தங்கரத்தினம் அவர்களைப் பார்த்து சத்தமிட்டுவிட்டு தானும் தோட்டில் விழுந்து படுத்துக் கொண்டார். அவ்வாறு இருவரும் தோட்டில் விழுந்து படுக்கவும் சரியாக குண்டுகள் நிலத்தில் விழுந்து வெடிக்கவும் நேரம் சரியாக இருந்தது."

குண்டுகள் வெடித்ததனால் எங்கும் ஒரே புகை மண்டலமாகக் காட்சியளித்தது. சுற்றாடலில் இருந்த பல வீடுகள் பலத்த சேதமடைந்து காணப்பட்டன. இருவரின் உடம்பு முழுவதும் உருவம் தெரியாத அளவுக்கு புழுதிமயமாகக் காணப்பட்டது. ஆனாலும் இருவரும் உயிர் பிழைத்துக்கொண்டதை உறுதிப்படுத்திக் கொண்டனர். புகைமண்டலத்தினூடாக அந்த இடத்தில் நின்றபடியே தங்கரத்தினம் அவர்கள் பார்த்தார்கள் அங்கே அவரது வீடு காணப்படவில்லை. வீடு அப்படியே நிலத்தில் தரைமட்டமாக இருந்தது. அந்த விமானம் ஒரே நேரத்தில் மூன்று குண்டுகளை வீசியது. அதில் ஒரு குண்டு இவர்களுக்கு அண்மையிலும் விழுந்துள்ளது. விழுந்த அந்தக் குண்டு ஏறத்தாழ 6 அடி ஆழத்திற்கு நிலத்தை ஊடறுத்துச் சென்று வெடிக்காமல் அப்படியே இருந்தது.

கலைப்பொழுதில் நடந்து முடிந்த இந்த அதிசயமான நிகழ்வையும் அதில் தான் அதிசயக்கத்தக்க வகையில் உயிர் தப்பியுள்ளதையும் உணர்ந்து கொண்ட தங்கரத்தினம் அவர்கள் சந்நிதி முருகனுடைய அருளின் சிறப்பை நினைந்து ஆனந்தக் கண்ணீர் விட்டார். அந்த நேரத்தில் அவருடைய மகனின் ஞாபகம் அவருக்கு வந்தது. இவ்வாறு தன்னை உயிர் பிழைக்க வைத்த சந்நிதி முருகன் நிச்சயமாக பிரிந்திருக்கின்ற தன்னுடைய மகனையும் தன்னுடன் சேர்த்து வைப்பான் என்ற நம்பிக்கையை மேலும் உறுதிப்படுத்திக் கொண்டார். அவ்வாறு இருவரும் ஒன்று சேரவேண்டும் என்பதற்காகவே தான் உயிர் தப்பி உள்ளேன் என்பதையும் அவருடைய மனம் ஆறுதலாக சொல்லிக் கொண்டிருந்தது.

முழுநாளும் வீட்டிற்குள்ளேயே இருக்கின்ற தங்கரத்தினம் அவர்கள் குண்டு விழுகின்ற அந்த நேரத்தில் மட்டுமே அங்கிருக்கவில்லை. குண்டு வீச்சு நடைபெற்ற பின்பும் அவர் வேறு எங்கும் செல்லவில்லை. அந்த வளவிற்குள்ளேயே சிறியதும் இன்னொரு கொட்டில் வீடு அமைத்து அங்கேயே குடியிருந்தார். அதேபோல சைக்கிளில் வந்து கொண்டிருந்த திரு சி. இராசேந்திரம் அவர்களும் ஒரு முருகபக்தர். இவர் கரிக்காடு, வல்வெட்டித்துறை என்ற விலாசத்தில் குடியிருக்கின்றார். மேலும் இவர் தற்பொழுது பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவில் சாரதி பரிசோதகர் ஆக கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார். வெள்ளிக் கிழமைகளில் சந்நிதி முருகனை சைக்கிளில் வந்து தரிசிப்பதை இப்பொழுதும் இவர் வழக்கமாகக் கொண்டுள்ளார். அதேபோல அன்றும் சந்நிதி முருகனை தரிசிப்பதற்காக சைக்கிளில் வந்து கொண்டிருக்கும் பொழுதே இந்தச் சம்பவம் நடைபெற்றது. ஒரு முப்பது வினாடிகள் தாமதமாக வந்திருந்தால் சரியாக அவரும் குண்டு வீழ்ந்த இடத்தில் அகப்பட்டு இறந்திருப்பார். திரு சி. இராசேந்திரத்தைக் தப்ப வைத்து அவர் மூலமாக திருமதி தங்கரத்தினம் அம்மையாரையும் காப்பாற்றியது அவர்கள் இருவரும் அப்பொழுது நினைந்து வழிபட்டுக் கொண்டிருந்த கலியுகக் கந்தன் சந்நிதி முருகன்தானே.

இவ்வாறு சாணத்தை எடுப்பதற்காக வெளியே அனுப்பி திருமதி தங்கரத்தினத்தின் உயிரைக்காப்பாற்றிய கலியுகக் கந்தன் சந்நிதி முருகன் அவருடைய நீண்ட நாளைய வேண்டுதலையும் சிறிது காலத்தில் நிறைவேற்றி தன்னுடைய அருளின் அற்புதத்தை மேலும் அவருக்கு வெளிப்படுத்தியுள்ளார். ஆம்! தேசிய போராட்டத்தில் இணைந்தவர்கள் வன்னிக்கு இடம்பெயர்ந்து சென்றதால் திருமதி தங்கரத்தினம் அவர்களும் இந்தச் சம்பவம் நடந்து சில மாதங்களின் பின் தனது மகனைத் தேடி ஆபத்தான பாதைகளினூடாக வன்னிக்குச் சென்று அங்கே தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகனைத்தேடும் முயற்சியில் ஈடுபட்டார். என்ன ஆச்சரியம் இங்கே வருடக்கணக்காகத் தேடியும் சந்திக்க முடியாத மகனை அந்த பரந்த பிரதேசத்தில் மிக இலகுவாக சந்திக்கும் சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்தது. அது மட்டுமல்ல மகனும் மனம்மாறி தாயுடன் சேருவதற்கும் சம்மதித்து விட்டார்.

ஆகவே எவ்வளவு துன்பம் வந்தாலும் எவ்வளவு காலம் சென்றாலும் ஆழமையான பக்தியும் உண்மையான இறை நம்பிக்கையும் உள்ளவர்கள் அந்த நம்பிக்கையிலிருந்து தளம்ப மாட்டார்கள் என்பதை இந்தச் சம்பவங்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன. மேலும் நன்கு முறையாக நம்புகின்றவர்களின் வேண்டுதல்கள் எவ்வகையான வேண்டுதல்களாக இருந்தாலும் அவற்றைக் கலியுகக் கந்தன் சந்நிதி முருகன் நிறைவேற்றத் தவறுவதில்லை என்பதையும் நாம் உணர முடிகின்றதல்லவா!

ஓம் முருகா!

நா. அரியரத்தினம்
தொண்டைமானாறு.

குறிப்பு:- சந்நிதி முருகப் பெருமானுடைய இவ்விதமான அற்புத நிகழ்வுகள் தொடர்ச்சியாக ஒவ்வொரு மலரிலும் வெளிவந்து கொண்டிருக்கிறது. இவ்வாறான அற்புத நிகழ்வுகளை அனுபவித்த அன்பர்கள் தகுந்த ஆதாரத்துடன் விளக்கமாக குறிப்பிட்டு மலர்க் குழுவிற்கு அனுப்பினால் அவற்றையும் இந்நூலில் இடம் பெறச்செய்வோம்.

## ஞானம் பெறுவதற்கு வழி

மனிதன் உலகப் புதினங்களை பார்ப்பதற்காக எவ்வளவோ துடிதுடித்துக் கொண்டிருக்கின்றான். அதற்காகச் செலவழிக்கும் நேரத்தில் மிகச் சிறிய பங்கையாவது தன் தன் மனதில் நிகழ்ந்து கொண்டிருக்கும் புதினங்களைப் பார்ப்பதற்குச் செலவு செய்தால் பாவத்தைத் தீர்ப்பதற்கான ஞானம் பிறப்பதற்கு வழிகோலும்.

சுவாமி கெங்காதரானந்தா
திருமலை.

சிறந்த தானம் சுயநலமற்ற சேவை.

# தமிழில் சிறுகதை வளர்ச்சி

மூன்றாவது கட்டத்தில் தோன்றிய சிறுகதை ஆசிரியர்களின் எண்ணிக்கை பழையவர்களும் புதியவர்களுமென அதிகரித்துக் கொண்டு வந்தது. ந. பிச்சமூர்த்தி, தி. ஜானகிராமன், க. நா. சுப்பிரமணியன், கு. அழகிரிசாமி போன்றவர்களும் இலங்கையில் சே. கணேசலிங்கம், டொமினிக் ஜீவா, டானியல், பொன்னுத்துரை போன்றவர்கள் விதந்து குறிப்பிடக் கூடியவர்கள் ஆவர். தஞ்சைத் தமிழை சிறுகதைக்கு கொண்டு வருவதில் வெற்றி பெற்றவர் ஜானகிராமன். பேச்சு மொழியோடு யதார்த்தநிலை பாத்திரங்களினூடாக இலக்கியத்தை தூக்கிவிடுவதே இவரது போக்கு. மன ஓட்டத்தின் பல்வேறு அம்சங்களை விரிவாகச் சித்திரிப்பவர் லா. ச. இராமாமிர்தம். வருக்கு வழிகாட்டியவர் மௌனி ஆவார். தமிழகத்திலும் சில புதிய சீர்திருத்தங்கள் குறிப்பாக குடும்பக் கட்டுப்பாடு, பெண்கள் அலுவல் பார்ப்பது, படித்த பெண்கள் பொதுத் தொண்டுகளில் ஈடுபடுவது, சமூக ஏற்றத் தாழ்வு என்ற பொருள்களில் பலர் கதைகளை எழுதினர். மனிதனை சமுதாயத்தின் ஓர் உறுப்பாகப் பார்த்து சமூக மாறுதல்களுக்கு அவன் உள்ளத்திலும் வாழ்விலும் எத்தகைய எதிரொலி ஏற்படுகின்றது என்பதை பதிவு செய்தவர்கள் இவர்கள். அண்மைக் காலத்தில் பல இளம் எழுத்தாளர்கள் சிறுகதை எழுதுவதற்காக பிரவேசித்திருக்கின்றார்கள். அவர்கள் பெரும்பாலும் வியாபார நோக்கில் கதை எழுத முற்பட்டிருப்பதனால் இலக்கியத்தின் தன்மை குறைந்து கொண்டு போகின்றது.

அண்மைக்காலச் சிறுகதை வளர்ச்சியில் 3 வகையான போக்குகள் காணப்படுகின்றன.

01) கேளிக்கை வடிவங்களை தேவைக்கு ஏற்ப உற்பத்தி செய்து குவிக்கும் வணிக எழுத்தாளர்கள் ஒருவகை.

02) வணிக இதழ்களிலும் இலக்கிய இதழ்களிலும் பெரிதும் குறைந்த பட்ச இலக்கியத் தகுதி உடைய எழுத்தாளர்கள் இன்னொரு வகை. பாலவல்லவன், எஸ். ராஜகிருஷ்ணன், சங்கர நாராயணன், கார்த்திகா, ராஜ்குமார் போன்றவர்கள் இவ்வகையில் அடங்குவர்.

03) தரமான இலக்கிய இதழ்களில் மட்டும் தம் எழுத்துக்களை முன்வைக்கும் எழுத்தாளர்கள் — கோணங்கி, சுப்பிர பாரதி மணியன், கோபிகிருஷ்ணன், கௌதம சித்தார்த்தன் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். எப்படிப் பார்த்தாலும் சிறுகதை வளர்ச்சியில் மணிக்கொடி போன்றதொரு காலம் திரும்பி வருவது அரிதானது போலவே தோன்றுகின்றது.

திரு. கி. நடராசா
(அதிபர், யா / உடுப்பிட்டி அ. மி. கல்லூரி)

விலை உயர்ந்த பொருள் ஆசையின்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Easy way to Learn English

## PART 12

[illegible]

I. **Fill in the blanks with the correct form of the verbs withen brackets:**

This is the rainy season. The monsoon winds are ....... (blow) over vadamaradchy. There is plenty of rain in the villages now. The farmers there have...— — (plough) their fields, and have — ..... (sow) paddy in them. They have ...— — (clear) their gardens and have ....... (plant) tomatoes onions and chillies in their gardens.

Ravy has ....... (plant) tomatoes and chillies in his garden. He has . ... (manure) them and has...... (make) a fence round the garden. But Ravi is not very happy. A lot of rain is not good for tomatoes and chillies.

II. **Fill in the blanks with ie or ei**

| | |
|---|---|
| (a) bel...... ve | (b) th ... r |
| (c) sc nce | (d) stor s |
| (e) ....... ght | (f) ... ther |
| (g) rec....... ve | (h) f...... ld |
| (i) n . ...ce | (j) countr... s |
| (k) for ... gn | (l) p... ce |

III. **For Each word in list A there is a similar meaning in list B match them**

| A | B |
|---|---|
| student | grades |
| learn | college |
| story | pupil |
| classes | simple |
| school | get |
| vacation | tale |
| receive | study |
| easy | holidays |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IV. Complete the sentences with the a or an

(a) I have ... .... notebook and ....... grammar book. ......... note book is brown. ... ..... grammar book is red.

(b) Right now Ravy is sitting between ......... woman and ..... man. ......... woman is Rany. ... ... man is Gobal.

(c) Mala is wearing ... ... ring and .......... necklace. ......... ring is on her left hand.

(e) Bala and Gobal are waiting for their plane to depart. Bala is reading ... magazine. Gobal is reading ...... newspaper. When Bala finishes ......... newspaper and Gobal finishes ... ... magazing. They will exchange.

(d) Mala and kamala live in ........ apartment in ..... old building. They like .. ... apartment because it is big. ... building is very old. It was built more than hundred years ago.

V. Complete the sentences using something someone and anything.

(a) I have......... in my pocket
(b) Do you have ...... in your pocket
(c) I bought ... ... when I went shopping yesterday.
(d) My roommate is speaking to......... on the phone
(e) I talked to ... ... at the phone company about my bill.
(f) Ram gave me ...... ... for my birthday.
(g) Ravi didnt give me .......... for my birthday.

S. Thurairajah
(English Tutor)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை மாத வாராந்த நிகழ்வுகள்

**01-01-99** வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்
அறிமுகவுரை: திரு .சு. திருப்பரங்கிரிநாதன்
(பேரவையின் தலைவர்)
**சொற்பொழிவு: ' இந்திரஜாலம் '**
வழங்குபவர்: சுவாமி சித்ரூபானந்தா
(ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை)

---

**08-01-99** வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்
அறிமுகவுரை: இசைமணி சி. துரைராசா (பேரவை உறுப்பினர்)
**விடயம்: ' புல்லாங்குழலிசை '**
வழங்குபவர்கள்: செல்வன் ப. கோகிலன் (யாழ்ப்பாணம்)
வயலின் ; அ. ஜெயராம்
மிருதங்கம்: க. சிவகுமார்
கெஞ்சிரா : ப. பாலமுகுந்தன்

---

**15-01-99** வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்
அறிமுகவுரை: திரு சி. நாகலிங்கம் (பேரவை உறுப்பினர்)
**விடயம்: ' மங்கள இசை '**
வழங்குபவர்கள்: மறவனூர் T. M. வாசகர் குழுவினர்

---

**22-01-99** வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்
அறிமுகவுரை: திரு. க. கந்தசாமி (பேரவை உறுப்பினர்)
**சொற்பொழிவு: ' விவேகானந்தர் காட்டிய வழி '**
வழங்குபவர்: செல்வன் சிவஞானம் பாலமுரளி

---

**29-01-99** வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

# ஞானச்சுடர் - மாத வெளியீடு

# தை - 1999

வெளியீட்டுரை: திரு. ஆ. சிவநாதன்
(ஆசிரியர், ஹாட்லிக்கல்லூரி)
ஆய்வுரை : பேராசிரியர் க. சின்னத்தம்பி
(கல்வியல் துறை, பல்கலைக்கழகம்-யாழ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் கவனத்திற்கு

முதல் பத்து மலரிலும் வெளியிடப்பட்ட விடயங்களை உள்ளடக்கியதாக நடைபெற்ற வாசகர் போட்டிக்குரிய பெறுபேறுகள் வரும் ( 1999 ) தை மலரில் இடம்பெறும் என்பதையும் அவர்களுக்குரிய பரிசுகள் மாசி மாத மலர் வெளியீடு அன்று வழங்கிக் கௌரவிக்கப்படுவார்கள் என்பதையும் மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

## அன்பான வேண்டுகோள்

மலருக்கு பொருத்தமான, தரமான ஆக்கங்களை எமக்கு அனுப்பி வைக்குமாறு சமய பெரியார்களையும், அறிஞர் பெருமக்களையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மலர்க் குழு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை.

செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org